தவழ்ந்தது. ''என்ன வேணுமானாலும் செய்துக்கோங்க'' எனக் கொஞ்சினாள்.

அருகில் நெருங்கிய அவன் அவள் கையிலிருந்த பூக்குடலையை இழுத்து அதை அவள் தலைமீது கவிழ்த்தான். குடலையில் இருந்த பூக்கள் எல்லாம் அவள் தலைமீது உதிர்ந்து ஓடின.

சஞ்சலம் தீர்ந்த ரஞ்சிதம் பதிலுக்கு ஒரு புன்னகை செய்தாள்.

## சித்தி

டாக்டர் ஜானகி தனது இருபத்தெட்டாவது வயதில் விசுவா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜிங் டைரக்டர் ஸ்ரீதரனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப் பட்ட பொழுது, சிற்றன்னை என்ற தன்னுடைய ஸ்தானம் மிகவும் பயங்கரமாக இருக்கப் போகிறதென்று ஒரு கணங் கூட நினைக்கவில்லை.

முதல் மனைவி இறந்து பத்து வருஷங்கள் வரை தமது ஒரே பெண் சரோஜாவின் நிமித்தம் மறுமணம் செய்துகொள்ளாது தனிமையில் காலம் தள்ளிய ஸ்ரீதரன், தமது முப்பத்தெட்டாவது வயதில் திடீரென்று விவாகம் செய்துகொள்ள உத்தேசித்ததைக் கேட்ட அவரது முதல் மனைவியின் பெற்றோர்கள் சிறிது அதிருப்தியே அடைந்தனர். ஸ்ரீதரனுக்கு ஏற்பட்ட சிந்தனைமாற்றத்தின் காரணம், அவருக்கு ஜானகியின் அழகிய தோற்றத்தில் ஏற்பட்ட மதிமயக்கமா? அல்லது, ஜானகிக்கு ஏற்பட்ட குரு தசையின் மகிமையா? யாருக்கும் தெரியாது. ஆயினும், பத்து வருஷங்களுக்குப் பின் ஸ்ரீதரன் இரண்டாவது விவாகம் செய்து கொண்டார்.

கணவனது இச்சைப்படியே வைத்தியத் தொழிலைக் கைவிட்டுக் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு புக்ககம் வந்த ஜானகிக்கு, தனது வாழ்க்கை சிற்றன்னை என்ற



ஸ்தானதாவில் எப்படி இருக்குமோ என்ற ஒரு சிறு பயம் இருக்கத்தான் இருந்தது. ஏனெனில், ஸ்ரீதரனின் பெண் சரோஜா சிறு குழந்தையல்ல; பதினெட்டு வயது யுவதி. கலாசாலையில் பி. ஏ. முதல் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள்.

இத்தனை வருஷங்களுக்குப் பின், இவ்வளவு பெரிய ஒருத்தி இருக்கையில் தாம் இரண்டாவது விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்து ஸ்ரீதரனுக்கே கொஞ்சம் மனக்கிலேசத்தை உண்டுபண்ணியதுபோலும்! கலாசாலைப் படிப்பின் நிமித்தம் நகரத்திலே தன் தாத்தாவின் வீட்டில் வசித்து வந்த சரோஜினியை வற்புறுத்தி விவாகத்தின் பொழுது அழைக்காது, தமது விவாகத்தைப் பற்றிக் குறிப்பாக ஒரு கடிதம் மட்டும் எழுதிப் போட்டார் ஸ்ரீதரன்.

விவாக தினத்தன்று தன் கணவருக்குப் பெண் எழுதிய கடிதத்தை ஜானகியும் படித்துப் பார்த்தாள். கடிதத்தில் சரோஜினி தன் தந்தையின் இரண்டாவது விவாகத்தைப்பற்றித் தன் சந்தோஷத்தையோ அல்லது மன வருத்தத்தையோ குறிப்பிடவே இல்லை! பரீக்ஷை முடிந்ததும் தான் ஊருக்கு உடனே புறப்பட்டு வந்துவிடுவதாக மட்டும் எழுதியிருந்தாள். அத்தனை சாமர்த்தியமாக மன உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்க்கு முன்னே ஜானகிக்கு ஒருவித பயம் ஏற்பட்டதில் ஆச்சரியம் இல்லை.

ஸ்ரீதரனுக்கு உறவினர்கள் வேறு எவரும் இல்லாததனால் கணவன்-மனைவி என்ற அவர்களுடைய வாழ்க்கை மிகவும் இனிதாக நடந்து கொண்டிருந்தது. ஆறு மாத காலத்தை ஆறே நிமிஷமாகச் சந்தோஷத்தில் கழித்த ஜானகி, அன்று வந்த கடிதத்தைக் கண்டு கலக்கமடைந்துபோனாள். பரீக்ஷை முடிந்துவிட்டதனால் இரவு ரெயிலில் புறப்பட்டுக் காலை எட்டு மணிக்கு வருவதாகச்

சரோஜினி தன் தகப்பனாருக்கு எழுதியிருந்த கடிதம் அது. அந்த நிமிஷமே ஜானகியைக் கிலி பிடித்துக் கொண்டு விட்டது.

ஸ்டேஷனுக்குச் சென்றிருந்த ஸ்ரீதரனுடைய கார் வாசலில் நிற்கும் சத்தம் கேட்டது. படபடவென்று துடித்த இருதயத்துடன் அவர்களை வரவேற்க ஜானகி கீழே இறங்கி வாசல் பக்கம் வந்தாள். சிறு கைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு பிரயாணக் களைப்பு நிரம்பப்பெற்றவளாகத் தள்ளாடிக்கொண்டு உள்ளே நுழைந்த அந்தப் பெண்ணைக் கண்டதும் ஜானகி ஒரு கணம் பிரமித்தே போனாள். ஸ்ரீதரனையே சாயலில் ஒத்திருந்த சரோஜினி இத்தனை அழகிய பெண் என்று ஜானகி நினைக்கவேயில்லை.

''வாம்மா! சரோஜா வா!'' என்று மலர்ந்த முகத்துடன் ஜானகி தன் பெண்ணை வரவேற்க முன்னால் வந்தாள். சிற்றன்னையைத் திரும்பிப் பார்த்த சரோஜினியின் முகத்தில் பிரமிப்போ வெறுப்போ ஒரு குறியும் தென்படவில்லை.

''அப்பா! பெட்டியை மாடி ரூமிலேயே வைக்கச் சொல்லுங்கள். எனக்கு அந்தப் பழைய ரூமிலேதான் தூங்குவதற்குப் பிடிக்கும்'' என்று தகப்பனார் பக்கமாகப் பார்த்துக் கூறிய சரோஜினி சிற்றன்னையைப் பொருட்படுத்தாதவள்போல் உள்ளே மிக்க உரிமையுடன் நடந்து சென்றுவிட்டாள்.

வந்ததும் வராததுமாகச் சரோஜினி தன்னிடம் காட்டும் மரியாதைக் குறைவான போக்கை ஜானகி உணர்ந்தாலும், வெளியில் காட்டாது, ''வெந்நீர் தயாராக இருக்கிறது. சரோஜினியை ஸ்நானத்துக்குப் போகச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு உள்ளே திரும்பினாள்.

அடுத்த சில நாட்களில் ஜானகி சரோஜினியைப் பற்றி நன்கு புரிந்துகொண்டு விட்டாள். தகப்பனாருடன் பாகப் பேசும் சரோஜினிக்கு, ஜானகியைக் கண்



டதும் வாயடைத்துவிடும். கேட்கும் கேள்விகளுக்கு உண்டு இல்லை என்பதைத் தவிர வேறு எதுவும் சிற்றன்னையுடன் பேச விரும்பாமலே காலங் கழித்தாள் அவள். தன் முகத்தைக்கூட நிமிர்ந்து நன்றாகப் பார்க்க விரும்பாத அந்தப் பெண்ணுடன் எப்படிப் பேசி, அவள் மனத்தில் சிநேக பாவத்தை உண்டாக்குவது என்பது ஜானகிக்குப் புரியாத புதிராக இருந்தது. இதையெல்லாம் அறிந்து கொள்ளாத ஸ்ரீதரன் பெண் வீட்டிற்கு வந்த மூன்றாவது நாளே தமது தொழிலின் நிமித்தம் வெளியூர்ப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு விட்டார். கணவன் வருவதற்கு ஒரு வாரம் ஆகும் என்பதை உணர்ந்த ஜானகிக்குக் கவலை தாங்க முடியவில்லை. ஒரு வார காலம் வரை பேசா மடந்தையான சரோஜினியுடன் எப்படி அந்த வீட்டில் காலத்தைக் கடத்துவது?

அன்று காலை எழுந்ததும், ''சரோஜா! சீக்கிரம் குளித்துவிட்டுக் காப்பி சாப்பிட வாம்மா!'' என்று ஜானகி, தனது மனக்கிலேசத்தை அடக்கிக்கொண்டு கூறினாள். இரண்டு மூன்று தடவைகள் வற்புறுத்தி ஜானகி கூறியும் சரோஜா காதில் கேட்காதது போல் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிறகு வெகு நேரம் கழித்தே எழுந்து சென்றாள். அன்று பொழுது எப்படியோ கழிந்தது. இஷ்டப்படி சாப்பிடுவதும் இஷ்டப் பட்ட பொழுது தூங்குவதுமாகக் கழித்தாள் சரோஜா.

அன்று இரவு படுக்கையில் படுத்த ஜானகிக்குத் தூக்கமே வரவில்லை. இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு டகடகவென்று ஒலித்த தையல் மிஷினின் சப்தத்தைப் பொறுக்க முடியாது படுக்கையினின்று எழுந்தாள். மெல்ல அறையின் கதவைத் திறந்துகொண்டு மாடியின் முன் ஹாலை அடைந்தாள் ஜானகி. தனக்குள் எழுந்த கோபத்தைச் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு

''இன்னும் தூங்கப் போகவில்லையா, சரோஜா!'' என்று மிகவும் கனிவாகக் கேட்டாள்.

தையல் மிஷினில் அவசரமாகத் தைத்துக் கொண்டிருந்த சரோஜா தலையை நிமிர்த்திப் பார்த்தாள். அவளது அழகிய இரு விழிகளில் குரோதம் பொங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்த ஜானகியின் உடல் ஒரு தடவை பயத்தால் சிலிர்த்தது. ''சே! இந்தச் சிறு பெண்ணிடத்தில் நமக்கு என்னத்திற்குப் பயம்!'' எனத் தன்னையே கடிந்துகொண்ட ஜானகி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''ராத்திரி பன்னிரண்டு மணி வரை கண் விழித்தால் உடம்புக்கு ஆகுமா?'' என்றான்.

''என் உடம்பைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை'' என வெடுக்கென்று பதில் அளித்த சரோஜினி ஜானகியின் பக்கங் கூடத் திரும்பிப் பார்க்காமல் தையலிலேயே கவனமாயிருந்தாள்.

ஜானகிக்கு ஏற்பட்ட அவமான உணர்ச்சியில் மேலே என்ன பேசுவதென்று தெரியவில்லை. சிறிது நேரம் அசைவற்று நின்றுவிட்டு, ''இப்படி நீ தைத்துக்கொண்டிருந்தால் உன் தூக்கம் கெடுவதுடன் என் தூக்கமும் கெடுகிறது. அதனால் சொன்னேன்'' என்றாள் எரிச்சலுடன்.

சட்டென்று எழுந்திருந்த சரோஜா பதிலே பேசாது தைத்துக்கொண்டிருந்த துணியைத் தாறுமாறாக வாரி எடுத்து பீரோவுக்குள் திணித்து, கதவைப் படார் என்று சாத்திப் பூட்டிவிட்டுப் படக்கென விளக்கையும் அணைத்தாள். அடுத்த நிமிஷம் பக்கத்து அறைக் கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டது. சரோஜா வெகுண்டவளாகத் தூங்கச் சென்றுவிட்டாள்.

சிற்றன்னை என்று கிஞ்சித்தும் நினைக்காது தன்னை மிகவும் துச்சமாகக் கருதும் சரோஜினியின் மனப்பான்மையை எண்ணி எண்ணி மனம் புண்ணான ஜானகிக்கு அன்று தூக்கமே வரவில்லை. இனிமேல் தனது வாழ்க்கை



எத்தனை பயங்கரமாகப் போகப் போகிறதோ என்ற துக்கத்தில் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது. இருந்த போதிலும் இந்தப் பெண்ணை இப்படி நடந்துகொள்ள அநுமதிப்பதில்லை, பொழுது விடியட்டும் என்று ஆத்திரத்துடன் இரவைக் கழித்தாள் ஜானகி.

மறுநாள் காலை எழுந்திருந்ததும் ஜானகி சரோஜினியோடு பேச விரும்பவில்லை. சாவதானமாக வீட்டுக்காரியங்களைச் சற்றுக் கவனித்துவிட்டு மாடிப் பக்கம் வந்தவள் அங்கே சரோஜினியைக் காணாது திகைத்துப் போனாள். தோட்டப் பக்கம் போயிருக்கிறாளோ என்று கவலையோடு போய்ப் பார்த்தபோது, சரோஜினி சிநேகிதி கமலா வீட்டிற்குப் போயிருப்பதாகவும், பகல் அங்கே சாப்பிட்டுவிட்டுச் சாயங்காலந்தான் வருவாள் என்றும் தோட்டக்காரன் சொன்னான். ''எத்தனை துணிச்சல்!'' என்று பல்லைக் கடித்துக்கொண்டாள் ஜானகி.

அன்று சாயங்காலம் இருட்டிய பின்பு சரோஜினி பூனை போல் வீட்டிற்குள் நுழைவதைக் கவனித்த ஜானகி, ''எங்கே சொல்லாமல் போய்விட்டாய்?'' என்று ஆரம்பித்தாள் கோபமாக.

சித்தி அதட்டுவாள் என்று எதிர்பாராத சரோஜினி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ''உங்களிடம் சொல்லிவிட்டுத்தான் போக வேண்டுமோ?'' என்று ஏளனமாகக் கேட்டாள் பதிலுக்கு.

''உங்கப்பா ஊரில் இல்லாததனால் உன்னைக் கவனிக்கும் பொறுப்பு என்னுடையதுதான். ஏதாவது நேர்ந்தால் நாளைக்கு உங்கப்பாவுக்கு என்ன பதில் சொல்வேன்?'' என்று ஜானகி நிதானமாகச் சொன்னாள்.

''பச்சைக் குழந்தையல்ல நான். என்னைக் கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும்'' என முகத்தைக் குலுக்கிய சரோஜினி அவ்விடத்தை விட்டுப் போகப் புறப்பட்டாள்.

ஒன்று அல்லது இரண்டு என்று தீர்மானித்துவிட்டால் ஒழிய ஜானகியின் மனம் அன்று நிம்மதியடையாது போலிருந்தது. ''இதோ பார், சரோஜா! அப்படி உட்கார்! உன்னிடம் நான் சில விஷயங்கள் பேசவேண்டும்'' என்று கடுமையான குரலில் சொன்னாள். சரோஜினியின் முகமும் கடுமையாக இருந்தது. எந்தவிதமான கேள்விகளுக்கும் தயாராகப் பதில் அளிக்கத் தனக்குத் தெரியும் என்ற பாவனையில் எதிரே இருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டாள் அவள்.

''நீ இப்படி நடந்துகொள்வதன் அர்த்தம் என்ன? உங்கப்பாவின் மனசைக் கலைத்து, அவரது திடவிரதத்தை ஒடித்து அவரை மணந்துகொண்டு விட்டதாக என்னைப் பற்றி உனக்கு வெறுப்பு அல்லவா? நான் ஒருத்தி மட்டும் ஆசைப்பட்டால் விவாகம் நடந்திருக்குமா? உங்கப்பாவும் விரும்பித்தானே என்னை மணந்துகொண்டார்! உன்னைப் போன்று சிறு பெண்ணாக இருக்கையில் நானும் லட்சியங்கள் பல கொண்டிருந்தேன். கணவனுக்கு உண்மையான அன்பு மனைவியிடம் இருந்தால், அவள் இறந்த பின்பு வேறு மணம் செய்துகொள்ளாது அவன் வாழ்க்கையைக் கழிக்கவேண்டும், அதுதான் உண்மை அன்பு என்று நானும் அக்காலத்தில் நினைத்தது உண்டு. ஆனால் அது பைத்தியக்காரத்தனம் என்று இன்று புலப்படுகிறது. அன்புக்கும் அடிமைத்தனத்திற்கும் வித்தியாசமில்லையா? உன் தந்தைக்கும் உனக்கும் இருக்கும் அன்பிற்கிடையே வேறு யாரும் வரக் கூடாது என்ற சுயநலப்பான்மையால்தான் நீ என்னை வெறுக்கிறாய். இது நியாயமே இல்லை. இத்தனை சிறு வயதில் உன் தந்தை சந்நியாசி வாழ்க்கை வாழ வேண்டும் என்று நீ எதிர்பார்ப்பது தர்மமா?'' எனப் படபடவென்று கோபத்தில் மொழிந்த ஜானகி, ஹால் சுவரில் மாட்டியிருந்த ஸ்ரீதரனின் முதல் மனைவியின் போட்டோ



வைச் சினத்துடன் திரும்பிப் பார்த்தாள். அடுத்த கணம் விம்மியழுத சப்தம் கேட்கவே, ஜானகி திகைப்புடன் திரும்பினாள். இந்தப் பெண் அப்படி அழும்படி அவள் என்ன சொல்லிவிட்டாள்? ஜானகி பேசாது உள்ளே சென்றாள். ஜானகிக்கு அன்று இரவு தூக்கமே வரவில்லை. தாயில்லாப் பெண்ணிடம் ஏன் மனம் நோகும்படி பேசினோம் என வருந்தியது அவள் உள்ளம்.

மறுநாள் காலை விடிந்ததும் விடியாததுமாகச் சரோஜினி படுக்கையைவிட்டு எழுந்திருந்தவள், அவசரமாகத் தன் பெட்டியில் சாமான்களைத் திணித்துக் கொண்டிருந்தாள். ''என்ன?'' என்று ஜானகி கேட்பதற்குமுன் சரோஜினி தானே பதில் சொல்ல ஆரம்பித்தாள்; ''நான் இன்று வண்டியில் என் தாத்தாவின் ஊருக்குப் புறப்படுகிறேன். எங்கப்பாவிடம் சொல்லிவிடலாம். என்னால் இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது'' என்று கூறித் தன் பெட்டியுடன் பிடிவாதமாக வீட்டை விட்டு வெளியே நடந்துவிட்டாள்.

ஊரிலிருந்து வந்த ஸ்ரீதரன் விஷயத்தை அறிந்ததும் ஸ்தம்பித்துப் போய்விட்டார். சரோஜினி இப்படி நடந்து கொள்வாள் என்று அவர் நினைக்கவேயில்லை. ஜானகி தன் பெண்ணிடம் ஒரு சமயம் மிகவும் கொடுமையாக நடந்து கொண்டாளோ என்னவோ என்று ஒரு சிறு சந்தேகமும் அவர் மனத்தில் தோன்றியதும் வாஸ்தவம். ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை.

இது நடந்து இரண்டு வருஷங்கள் சென்றன. இரண்டு வருஷங்களுக்குள் பலவித மாறுதல்கள் அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்டுவிட்டன. சரோஜினியின் பி.ஏ., படிப்பு முடிந்ததும் ஸ்ரீதரன் மிகவும் முயற்சி செய்து தகுந்த வரனாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார். மனஸ்தாபமெல்லாம் மறந்து ஜானகி தன் மூத்த பெண்ணின் கல்யாணத்தை விமரிசையாக நடத்துவதில் மிகவும் ஆர்

வத்தைக் காட்டினாள். சரோஜினிக்குக் கல்யாணமான அந்த வருஷ முடிவிலேயே அவளது தாத்தா மாரடைப்பில் இறந்துவிடவே, பாட்டி உத்தியோகம் செய்துகொண் டிருந்த தன் ஒரே பிள்ளையிடம் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டாள்.

ஒருநாள் சாயங்காலம் ஆபீசிலிருந்து திரும்பி வந்த ஸ்ரீதரன் வழக்கம்போல் சகஜமாக எதுவும் பேசாது கண் களை மூடிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந் தார். அதைக் கண்டு கவலையடைந்த ஜானகி அருகில் வந்து நின்றாள்.

''ஜானகி, ஒன்று கேட்கிறேன். நீ ஒப்புக் கொள் வாயா?'' என்று கவலையுடன் கேட்டார் ஸ்ரீதரன். விஷயம் புரியாத ஜானகி அவரை ஆச்சரியத்துடன் பார்த்து விழித்தாள்.

''என் பெண் சரோஜாவும் அவள் கணவனும் இங்கே வந்து நம்முடன் வசித்தால் உனக்கு ஆக்ஷேபம் ஒன்றும் இருக்காதே! நீ சம்மதப்பட்டால்தான் அவள் இங்கே வர முடியும்'' என்று தயக்கத்துடன் கூறிய ஸ்ரீதரன் அவளை மிகவும் இரக்கத்துடன் பார்த்தார்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த அந்தச் சிறு சம்பவத்தை ஜானகி மறந்து விட்டிருந்தாள். ''இதற்கு என்னைக் கேட்பானேன்? பேஷாக வந்திருக்கட்டுமே!'' என்று ஜானகி புன்னகை செய்தாள்.

''நீ சரி என்று ஒப்புக்கொண்டால்தான் அவள் இந்த வீட்டுக்குள் நுழைவாளாம். உன்னிடம் தான் கடுமையாக நடந்துகொண்டு விட்டதாக வருத்தப்படும் சரோஜினிக்கு உன் முகத்தைப் பார்க்கவும் இப்பொழுது வெட்கமாயிருக்கிறதாம். இன்று காலை அவளைப் பார்த்த பொழுது என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது'' என்று அவர் கூறி முடிப்பதற்குள், ''என்ன! சரோஜினியை இன்று பார்த் தீர்களா?'' என வியப்புடன் வினவினாள் ஜானகி.



''ஆமாம்! அதைத்தான் சொல்ல வருகிறேன். இன்று காலை அவளை அகஸ்மாத்தாக டவுன் கடைத் தெருவில் சந்தித்தேன். மாப்பிள்ளைக்கு இந்த ஊருக்கு மாற்றலாகி இருக்கிறதாம். தங்க வீடு பார்த்துக் கொண்டிருக்கிறாராம். அதுவரை இருவரும் ஹோட்டலில் இருப்பதாக முடிவு செய்திருக்கிறார்களாம். பெற்ற தகப்பன் பங்களா அரண் மனை போல் இருக்கையில் பூரண கர்ப்பிணியான பெண் அநாதையைப்போல் ஹோட்டலில் தங்கிக்கொண்டிருப் பதா! சரோஜாவைப் பார்த்ததும் என் மனம் பட்ட பாடு......'' என்று கூறிய ஸ்ரீதரனின் குரல் கர கரத்தது.

''நன்றாயிருக்கிறது, பேசுங்கள்! உடம்பு சரிப்படாத குழந்தையை உடனே வீட்டிற்கு அழைத்துவர யோசனை என்ன? என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு இப்படித் திரும்பிவந்தீர்கள்? வாருங்கள்! நாம் இருவருமே போய் அழைத்து வரலாம். சரோஜா சுத்த அசட்டுப் பெண்!'' என்று பச்சாதாபத்துடன் கூறிய ஜானகி கிளம்பினாள்.

அன்று இரவு தங்கள் பங்களாவில் பஞ்சணைமீது அலுப்புத்தீரப் படுத்துக்கொண்டிருந்த சரோஜா அருகில் வந்து நின்ற ஜானகியின் பக்கம் திரும்பி, என்றுமில்லாத புதுமையாய், ''சித்தி!'' என்று கூப்பிட்டாள்.

''என்னம்மா!'' என்றாள் ஜானகி.

''அன்று நீங்கள் கூறிய வார்த்தைகள் யாவும் உண்மை என்பதை நான் உணர்ந்து பல நாட்களாகி விட்டன. உங்கள் மனசை நோகச் செய்யும் என்னிடம் நீங்கள் அன்பாயிருப்பது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. உங்களை விட நல்ல மனைவி எங்கப்பாவுக்குக் கிடைத்திருக்க முடியாது! என் சித்தி!'' என்று உணர்ச்சியுடன் கூறிய சரோஜா ஜானகியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

புதிதாக ஏற்பட்ட இந்தச் சமாதானத்தில் மனச்

சாந்தியடைந்த ஜானகி, ''அடே அசடே! இதற்கெ
அழுகை! கண்ணைத் துடைத்துக் கொள்'' எ
சரோஜாவைச் சமாதானப்படுத்தினாள்.

## விசித்திரப் பெண்கள்

மேஜை மீது குவிந்து கிடந்த ஆபீஸ் காகிதங்க
பார்வையிட்டு மிகவும் திருப்தியடைந்தவன்
சோபாவின் மீது சாய்ந்து கொண்டான் சிவகிரி ஸிமெ
கம்பெனியின் முதலாளி ரகுராமன். கம்பெனி
சிப்பந்திகள் பகல் போஜனத்திற்குப் பிரிந்து செ
அறிவிப்பு மணி 'டாண் டாண்' என்று ஒலித்தது.
அடுத்து, கிரீச்சென்று சுழல் கதவுகள் செய்த சப்
மாடிப்படிகளில் வேகமாக இறங்கிச் செல்லும் தொழி
களின் அடியோசையும் சில நிமிஷங்கள் ஒலி
கொண்டிருந்தன. ரகுராமனின் பழக்கப்பட்ட க
அவனை அறியாமல் அறையின் வாசற்படியை நோ
வழக்கம்போல் வேலைக்காரப் பையன் வீட்டி
கொண்டு வந்த டிபன்-பாக்ஸுடன் உள்ளே நுழைந்

தங்கம் தன் கணவனுக்காகக் கருத்துடன் கவ
தயாரித்து அனுப்பியிருந்த பாதாம் ஹல்வாவைப் பீ
தட்டில் எடுத்து வைத்துவிட்டுப் பயபக்தியுடன் நின்
பையன். அப்புறம் மின்சார விசிறி சுழலும் சப்
தட்டின் மீது கரண்டி உராயும் சப்தமும் தவிர,
முழுவதுமே நிசப்தம் நிலவியிருந்தது. இரண்டே
யில் டிபனை முடித்துக்கொண்ட சிமெண்ட் கம்
முதலாளி சோபாவின் மீது சாய்ந்துகொண்டு கண்
மூடிக்கொண்டான். தினம் நடக்கும் சம்பவந்தான்
ரகுராமனுக்குத் தனது வாழ்க்கை மிகவும் பழக்
விட்டிருந்தது. திரும்ப ஆபீஸ் துவங்கும்வரை ஒரு